# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு - பகுதி II (வெளிவாரி) - 2004/05
## (ஒக்ரோபர்/நவம்பர் – 2006)

## ECO 302 – பிரயோகப் பொருளியல்.

நேரம்: 3 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

1. அ. பெருந்தோட்டத் துறையில் கொண்டுவரப்பட்டுள்ள தனியார்மயமாக்கலை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. இக்கொள்கை பெருந்தோட்டத்துறையில் ஏற்படுத்திய தாக்கங்களைப் பரிசீலிக்குக.

(10 புள்ளிகள்)

2. "இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில் கொள்கையின் தோல்வியே ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் மயமாக்கல் கொள்கைக்கு காரணமாக அமைந்தது."

அ. இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கையின் பிரதான பலவீனங்களை அடையாளம் காண்க.

(05 புள்ளிகள்)

ஆ. ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் மயமாக்கல் கொள்கையின் பிரதான நோக்கங்களை விளக்குக.

(05 புள்ளிகள்)

இ. இலங்கையின் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் மயமாக்கல் கொள்கையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட மாற்றங்களை அடையாளம் காண்க.

(10 புள்ளிகள்)

3. இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்பட்ட போதும் அவை கருவள வீதத்துடனேயே நேரடியான தொடர்பு கொண்டுள்ளன. கருவள வீதம் என்ற எண்ணக்கருவை விளக்கி, அதனைத் தீர்மானிப்பதில் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சாரக் காரணிகளின் பங்கினைப் பற்றிக் கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

4. "1990 களில் ஏற்பட்ட உலகலாவிய மாற்றங்கள் பல மூன்றாம் மண்டல நாடுகளை புதிய சவால்களுக்கு முகம் கொடுக்க வைத்ததுடன் அவற்றுக்கு புதிய வகையான அனுபவங்களையும் ஏற்படுத்தின"

அ. 1990 களில் உலகப் பொருளாதாரம் அடைந்திருந்த புதிய மாற்றங்களை இனங்கண்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. இத்தகைய மாற்றங்கள் மூன்றாம் மண்டல நாடுகளில் ஏற்படுத்திய தாக்கங்களை, விசேடமாக இலங்கையைக் கருத்தில் கொண்டு ஆராய்க.

(10 புள்ளிகள்)

5. "ஒரு பொருளாதாரத்தில் ஏற்படும் கட்டமைப்பு மாற்றங்கள் என்பவை அக்காலகட்டத்தில் காணப்படும் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளை பிரதிநிதிப்படுத்துவனவாக அமைந்திருக்கும்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை 70களிலும் 80களிலும் இலங்கைப் பொருளாதாரத்தின் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை கருத்தில் கொண்டு பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

6. "சுதந்திரத்தின் பின் நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் எடுத்த பல தொடர் நடவடிக்கைகள் ஒப்பீட்டு ரீதியாக உள்நாட்டு விவசாயத்தைக் காட்டிலும் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் மீதே அதிக தாக்கத்தை ஏற்படுத்தின." இக்கூற்றினை ஏற்றுக் கொள்வீர்களா? காரணம் காட்டி பரீசீலிக்குக.

(20 புள்ளிகள்)

7. அ. கிராமிய உள்நாட்டு விவசாயத்தின் பண்புகளையும், பெருந்தோட்டத்துறை விவசாயத்தின் பண்புகளையும் வேறுபடுத்திக் காட்டுக.

(10 புள்ளிகள்)

ஆ. இலங்கையில் கிராமிய விவசாயிகள் எதிர் நோக்கும் பிரதான பிரச்சினைகளைப் பட்டியற்படுத்துக.

(10 புள்ளிகள்)

8. பின்வருவன பற்றி சிறு குறிப்பு எழுதுக.

1. கிராமியக் கொடுகடன்
2. உலக வர்த்தக அமைப்பு(WTO)
3. யூரோ (Euro)
4. சமகால அரசியல் ஸ்திரமின்மையும், இலங்கைப் பொருளாதாரமும்

(20 புள்ளிகள்)